

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கொளத்தூர் தொகுதியில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் முன்னிட்டு செம்மொழி 30 "திறனில் அவரவர் உயர்வு! திராவிடம் நமது உணர்வு!" எனும் தலைப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கே.சந்துரு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், பத்திரிகையாளர் .நக்கீரன் கோபால், கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என்.தீபக், ஆகியோர் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் மேயர் பிரியாராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐ.சி.எஃப்.வ.முரளிதரன், நாகராஜன் மற்றும் பலர் உள்ளனர்.


## வேலூர் மாவட்டம்

# காட்பாடி வடக்கு பகுதி செயலாளர் ஜி.வன்னியராஜா இல்ல திருமணம்!

### கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

வேலூர், ஜூலை,1-

வேலூர் மாவட்டம் காட்பாடி வடக்கு பகுதி திமுக செயலாளர் ஜி.வன்னியராஜா மாநகராட்சி மண்டல குழு தலைவர் புஷ்பலதா ஆகியோரின் இல்ல திருமணம் 2ந்தேதி (புதன்கிழமை) காட்பாடியில் நடக்கிறது. இதில் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்கள்.



காட்பாடி வடக்கு பகுதி திமுக செயலாளர் வன்னியராஜா மணடல குழு தலைவர் புஷ்பலதா ஆகியோரின் மகள் வி.விஷ்ணு பிரியா இராணிப்பேட்டை மாவட்டம் நவல்பூர் பூபதி ஜோதி ஆகியோரின் மகன் சுரேஷ் குமார் இவர்களின் திருமணம் நாளை (2ந்தேதி - புதன்கிழமை) காலை 9மணிக்குள் நடக்கிறது.

நிகழ்ச்சியில் கழக பொதுச் செயலாளர் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ் நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ். எஸ். சிவசங்கரன், இராணிப்பேட்டை ஆர்.காந்தி, இரா.ராஜேந்திரன், வி.ஐ.டி. வேந்தர்ஜி.விசுவநாதன், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்எல்ஏ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம்.கதிர்ஆனந்த், டி.எம்.செல்வகணபதி, சி.என்.அண்ணா துரை, மாவட்ட கழக செயலாளர்கள் க.தேவராஜி எம்எல்ஏ, எஸ்.ஆர்.சிவலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ, மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், கலந்து கொண்டு வாழ்த்து கிறார்கள்.

## நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரியில்

# பா.ஜ.க.வினர் மகேஷ் வில்சன் தலைமையில் கழகத்தில் இணைந்தனர்!

### மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில்!

நெல்லை.ஜூலை.1-

நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் முன்னிலையில் நெல்லை தெற்கு மாவட்ட பா.ஜ.க. ஐடி விங் மாவட்ட துணை தலைவர் மகேஷ் வில்சன் தலைமையில் 50 பேர் அக்கட்சியிலிருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

திராவிட மாடல் முதலமைச்சர். கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்றும், "ஓரணியில் தமிழ்நாடு"என்ற கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் குறிக்கோளை கருத்தில் கொண்டும் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர்,முதலமைச்சர் அவர்களை மனதார ஏற்றுக் கொண்டும், கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திறமையை புரிந்து கொண்டும் நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் நெல்லை தெற்கு மாவட்ட பா.ஜ.க. ஐடி விங் துணை தலைவர் மகேஷ் வில்சன் தலைமையில் அக்கட்சியிலிருந்து 50 பேர் விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வரவேற்று கழக இருவண்ண சால்வை அணிவித்தார்.

நிகழ்வில் மாநில தொண்டர் அணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.எஸ்.சுடலைக் கண்ணு, மறுகால்குறிச்சி ஊராட்சி மன்ற துணை தலைவர் புஷ்பபாண்டி,மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சங்கர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் குமார், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் உதயகுமார், ராபின், சுபாஷ், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வர்கிஸ்,ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் முத்து,ஒன்றிய பிரதிநிதி பரமசிவம் உள்பட கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

## சேப்பாக்கம் பகுதி

# இணையவழி உறுப்பினர் சேர்க்கை பயிற்சி பாசறை கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



தமிழ்நாடு முதல்வர் கழக தலைவரின் ஆணையின்படி தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் "ஓரணியில் தமிழ்நாடு" இணையவழி உறுப்பினர் சேர்க்கை பயிற்சி பாசறை கூட்டம் இன்று (01.07.2025 - செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணியளவில் சிந்தாதிரிப்பேட்டையில் அமைந்துள்ள காமாட்சி மீனாட்சி திருமண மண்டபத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எனது ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வலைத்தள முகவர்கள் (BDA) மற்றும் பாக முகவர்களுக்கு (BLA2) இணையதள வழியாக புதிய உறுப்பினர்களை சேர்ப்பது குறித்து நடைபெறும் விரிவான ஆலோசனை கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர் சி.எச்.சேகர், பகுதிக் கழக செயலாளர் எஸ்.மதன்மோகன், மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கழக செயலாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, (28.06.2025) எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு ஆலோசனைப்படி, திமுக அயலக அணி மாநில துணைச் செயலாளர் 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி தலைமையில், 99 வது வாடில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், என் குப்பை எனது பொறுப்பு நெகிழி விழிப்புணர்வு நிகழ்வை துவங்கி வைத்து, சாலையோரம் உள்ள கடைகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டது., இதில் 99வது வார்டு கோட்ட பொறியாளர் கே.சிவகுமார், துப்புரவு ஆய்வாளர் ஜி கிருஷ்ணமூர்த்தி, மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் உடன் இருந்தனர்.

## நம் மண்-மொழி-மானம் காக்க

# அநீதிகளுக்கு எதிராக "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தை முன்னெடுப்போம்!

### திருவண்ணாமலை மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஜூலை 1 –

நம் மண், மொழி, மானம் காக்க அநீதிகளுக்கு எதிராக ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை முன்னே டுப்போம் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்களை விளக்கி, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ. வேலு சிறப்புரை யாற்றி னார்.

30.06.2025 திங்கட்கி ழமை காலை 10.30 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா. இராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

செயற்குழுக் கூட்டத் தில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், பொதுப் பணி துறை அமைச்சருமான எ.வ. வேலு தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க., செயற்குழுக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.

வாராது வந்த மாமணியாம், கழகத்தின் எழுஞாயிறு, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள், ஜூலை13 அன்று திருவண்ணா மலை மாவட்டத்தில் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரவுள்ளார். அவருக்கு நமது மாவட்டத்தின் எல்லையில் எழுச்சியான வரவேற்பு அளிப்பது என இந்த செயற்குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது.

திராவிட மாடல் அரசு, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளிலும் போட்டியின்றி மாற்றுத்திறனாளிகள் தேர்ந்தெடுக்கவும் நமது அரசு வழிவகை செய்துள்ளது.

மேலும், சிறப்பு அம்சமாக அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் நான்கு சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் வகையில் அரசாணைபிறப்பித்துள்ள, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்த செயற்குழு நன்றியினையும், பாராட்டுதல்களையும் தெரிவித்து கொள்கிறது.

"ஓரணியில் தமிழ்நாடு என்ற கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவை நனவாக்கிட, நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக்கழகங்களின் சார்பில், ஒவ்வொரு வாக்குச்சாவடிக் குட்பட்ட பகுதியில் 30விழுக்காடு கழக வாக்காளர்களை வீடு, வீடாக சென்று சேர்த்திட வேண்டுமென இந்த செயற்குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது.

"ஓரணியில் தமிழ்நாடு ஜூலை 1 அன்று கழக தலைவர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் முன்னெடுப்பை அறிவிப்பார், அதை தொடர்ந்து நமது மாவட்டத்தில் செய்தியாளர்கள் சந்திப்பும், முன்னெடுப்பும் நடைபெறும்.

ஜூலை 2 அன்று நமது திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்டங்களில், இளைஞர்கள் அதிகஅளவில் பங்கு பெறும் பொதுக்கூட்டங்கள் நடைபெறும்.

ஜூலை 3 அன்று நமது மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சட்ட மன்ற தொகுதிகளிலும் உள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் அவரவர் சொந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வீடுகளுக்கு நேரில் சென்று, வாக்காளர்களை சந்தித்து, கழகத்தில் உறுப்பினராக சேர்த்திடல் வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங் கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

சட்டமன்ற செயற்குழுக் கூட்டத்தில் கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், நாடாளுமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன். முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர். சீதாபதி, கே.வி.ராஜ்குமார், ஆர். வேல்முருகன் மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தர ராசன், மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன்,

வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் க.லோகநாதன், ஜெயராணிரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணா மூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி. சேகரன், கோ.எதிரொலிமணியன், வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக் குமார், மு.பன்னீர்செ ல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க. சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி. மனோக ரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம். சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம். தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ. ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிர மணி, கா.சு. இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ண மூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர். நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா, தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி. கே.மோகன், கே.கோவர்த ணன், வேணிஏழுமலை மற்றும் திருவண்ணா மலை மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், அணிகளின் நிர்வாகி கள், மாவட்ட பிரதிநிதிகள் உட்பட சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக வடக்கு மாவட்ட துணை செயலாளர் ந.பாண்டுரங்கன் நன்றி கூறினார்.

## சென்னை வடக்கு மாவட்டம்

# பெரம்பூர் - இராயபுரம் - ஆர்.கே.நகர் தொகுதிகளில் "ஓரணியில் தமிழ்நாடு"விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, **"ஓரணியில் தமிழ்நாடு" விளக்க பொதுக்கூட்டங்கள் 02-07-2025 அன்று வெள்ளிக்கிழமை** சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர், இராயபுரம், ஆர்.கே.நகர் தொகுதிகளில் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.

| பகுதி | நடைபெறும் இடம் | சிறப்புரை | தலைமை |
|---|---|---|---|
| பெரம்பூர் தெற்கு | பழனியாண்டவர் கோவில் தெரு 44- வது வட்டம் | தி. செந்தில் வேல் ஊடகவியலாளர் | க. ஜெயராமன் பகுதி செயலாளர் |
| இராயபுரம் கிழக்கு | ஸ்ரீ ரங்கம்மாள் கோவில் தெரு 51- வது வட்டம் | வே. மதிமாறன் திராவிட இயக்க பேச்சாளர் | இரா. செந்தில் குமார் பகுதி செயலாளர் |
| ஆர்.கே.நகர் மேற்கு | வைத்தியநாதன் தெரு, தண்டையார்பேட்டை | இந்திரகுமார் தேரடி ஊடகவியலாளர் | எஸ். ஜெபதாஸ் பாண்டியன் பகுதி செயலாளர் |

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் - அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் - வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் ச. தியாகராஜன்

ஜூலை 1 (2006)



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தளகர்த்தர்களான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்

நாகை நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1965–ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**